செ.வெ.எண்: 09 நாள்: 03.10.2020

**அரியலூர் மாவட்டம்**
**அரசின் திட்டங்கள் மூலம் பொதுமக்கள் அனைவரும் பயனடையும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலையில் இன்று (03.10.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வேளாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, கால்நடைப்பராமரிப்புத் துறை, கூட்டுறவுத்துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட சமூக நல அலுவலகம், பொது சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்தும், இத்திட்டங்கள் மூலம் பயன்பெறும் வகையில் பயனாளிகள் தேர்வு குறித்தும், அரியலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளின் இலக்கீடுகள் குறித்தும், இந்த இலக்கீடுகளை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் தகுதியுடைய அனைத்து மக்களும் பயனடையும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்தாவது:-**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதில் குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் வேளாண்மைத்துறையின் மூலமாக பல்வேறு வகையான திட்டங்கள் அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஏழை, எளிய மக்களுக்கும் உயரிய மருத்துவ சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரியலூர் மாவட்டத்திற்கு புதிய அரசு மருத்துவக்கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை கட்ட ஆணையிடப்பட்டு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் பரவலை அரியலூர் மாவட்டத்தில் கட்டுப்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி, நகராட்சி மற்றும் பொது சுகாதாரத்துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்திட வேண்டும். மேலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றவும், வீடுகளிலிருந்து வெளிவரும் மக்கள் முககவசம் அணியவும் மற்றும் அடிக்கடி சோப்பு போட்டு கைகளை சுத்தமாக கழுவுதல் உள்ளிட்ட விழிப்புணர்வுகளை அரசு அலுவலர்கள் பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும். இருமல், காய்ச்சல், தொண்டை வலி உள்ளிட்ட அறிகுறிகள் தென்படும் மக்களை கொரோனா பரிசோதனை மேற்கொண்டு, நோய்தொற்று கண்டறியப்படும் நபர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.

நடப்பு பருவத்தில் அரியலூர் மாவட்டத்தில் வேளாண் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. எனவே, விவசாயிகளுக்கு தேவையான உரங்கள், வேளாண் இடுப்பொருட்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் உள்ளிட்டவைகள் தேவையான அளவில் இருப்பு இருப்பதையும் தொடர்புடைய அலுவலர்கள் உறுதிபடுத்திட வேண்டும். பேரிடர் காலங்களில் மழை, புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான உணவு பொருட்கள் இருப்பு வைத்திட வேண்டும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் தகுதியுடைய அனைத்து நபர்களும் பயன்பெறும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், செந்துறை நக்கம்பாடியில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நீரேற்று நிலையத்திலிருந்து மேல்நிலை குடிநீர் தொட்டிகளுக்கு குடிநீர் குழாய் அமைக்கும் பணியினையும், அரியலூர் பள்ளேரியில் தூர்வாரி தூய்மைப்படுத்தும் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள், மருத்துவர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**